**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

**<u>அசல் வழக்கு எண்.3/2017</u>**

2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் நாள் புதன் கிழமை வாதி/ பிரதிவாதி சாட்சியாகிய இவ்வாக்குமூலம் ஆக்ட் 10/1873ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.த.ஷோபனா, உதவியாளர் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையிலும் நேரடி கவனத்திலும் கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : Saravanan | தொழில் : | |
| தந்தை பெயர் | : தேவேந்திரன் | ஜாதி : | |
| கிராமம் | : | சமயம் : | |
| தாலுக்கா | : | வயது : | |

**வா.சா.1 முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் முதல்வாதி ஆவேன். நான் தற்போது சேவூரில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். நான் இந்த வாக்குமூலத்தை சத்தியபிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும்.

2. ஆவணங்கள்

வா.சா.ஆ.1 - 30.6.1993 தேதியிட்ட தேவேந்திரன் பெயரில் உள்ள பட்டா

வா.சா.ஆ.2- 5.2.2018 தேதியிட்ட தேவேந்திரன் பெயரில் வழங்கிய பட்டா சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3- 16.5.1995 தேதியிட்ட தேவேந்திரன் பெயரில் செலுத்திய வரி ரசீது அசல்

வா.சா.ஆ-4- 2.12.2016 தேதியிட்ட வாதிகள் பெயரில் எழுதிப்பட்ட செட்டில்மென்ட் ஆவணம் அசல்

வா.சா.ஆ.5 - 2.1.2017 தேதியிட்ட ஆரணி கிராமிய காவல் நிலையத்தில் வழங்கிய சிஎஸ்ஆர் ரசீது அசல்

வா.சா.ஆ.6 - 12.2.2018 தேதியிட்ட பிழைதிருத்த பத்திரம் அசல்

வா.சா.ஆ.7- 28.11.2016 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 1.1.1990 முதல் 27.11.2016 வரையிலான வில்லங்க சான்றிதழ் சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.8 - 3.1.2017 தேதியிட்ட வாக்கு சொத்திற்கான 1.1.2016 முதல் 2.1.2017 தேதி வரையிலான வில்லங்க சான்று சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.9 - 15.9.2022 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான 1.1.2016 முதல் 11.9.2022 தேதி வரையிலான வில்லங்க சான்று கணிணி நகல்

( பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரை ஆவணங்கள் குறியிடு செய்ய ஆட்சேபனை செய்யப்பட்டது. ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.